## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## எட்டு புஷ்பங்கள் [ஜீவாதார சக்தி எனப்படும் SAL ENERGY தொடர்பு உடைய கதை இது]

---

அந்தப் பெற்றோருக்கு ஒரே கவலை! ஏன் தங்கள் குழந்தைகள் சரிவர வேத சம்ப்ரதாயத்தின் படி பூஜை, புனஸ்காரம், வ்ரதம், கோயில், தீர்த்தம் ஆடுதல், விழாக்களைக் கொண்டாடுதல், வ்ரதம் இருத்தல் என்று எதிலுமே அசட்டையாக இருக்கிறார்கள் என்று ஒரே வருத்தம்.பின்னே? தம்பதியினர் கல்யாணம் ஆன முதலே ஒன்று விடாமல் சாஸ்த்ர சம்ப்ரதாயப்படி எல்லாவற்றையும் கடைப்பிடித்து வருகிறார்களே!

குழந்தைகள் கேட்டால் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?
"இதெல்லாம் காலநேரத்தை வீணடிக்கிற அக்கால விஷயம், மேலும் இதெல்லாம் மதப்பற்று கொண்டவை. நவீன காலத்தில் நல்ல குணம் மட்டுமே போதும், அதற்கே கடவுள் அருள்வார்"

எப்படிப்பட்ட மஹானும் வேத சாஸ்த்ரங்களின் படி அனைத்து விஷயங்களையும் அல்லவா கடைப்பிடிக்கிறார்கள்? அப்போது தானே அவர்தம் ஜீவாதார சக்தி அதிகரிக்கிறது? இதை எப்படிப் புரிய வைப்பது?

அன்று நவராத்ரி ஆரம்பம். உள்ளூர் கோயிலில் ஒரு பெரிய மஹான் வந்து ப்ரவச்சனம் செய்கிறார். இந்தப் பெற்றோர்கள் அவரை வீட்டுக்கும் அழைத்து வருகிறார்கள், குரு பூஜை செய்து மரியாதை செய்கிறார்கள். வீட்டில் அனைவரும் அவரின் ஆசீர்வாதம் பெறுகிறார்கள்.

குரு, "அம்மா! உங்கள் பிள்ளைகள் மிகவும் சாதுக்கள்! அவர்கள் பல்லாண்டு நலமுடன் வாழட்டும்! ஆனா அவர்களுக்கு எல்லாம் இக்காலத்தில் காலநேரத்தை செலவிட்டு பூஜை-ஜெபம் எனச் செய்ய எங்கே முடியும்? அதற்கு இணையான ஒரு சக்தி மிக்க வேறு ஒரு வழியைச் சொல்கிறேன். அதைச் செய்தால் மற்றவை மூலம் பெற முடிகிற அனைத்து பலன்களையும் பல மடங்காகவே பெறலாம்!" என்றார்.

"ஸ்வாமி! அவசியம் அதை உடனே சொல்லுங்கள்!" என்றனர் அனைவரும்.

குரு தொடர்ந்தார்.
"அஷ்டாங்க லிங்கம் என்று ஒன்று இருக்கிறது, தெரியுமா?"

அதற்கு ஒரு மகன்,
"ஸ்வாமி! அது எங்கே இருக்கிறது? எப்படிப் போகனும்?"

குரு,"மகனே! அது எங்கும் இல்லை! உன் மனதுள் இருக்கும் ஜீவாதார சக்தியே அது.அதை நான் சொல்லும் எட்டு விதமான பூக்கள் கொண்டு அன்றாடம் மனதுள்ளேயே பூஜித்தால், அனைத்தும் கிடைக்கும்!"

"எட்டு பூக்களா?அவை என்ன?"

" * ***மனசு தான் பூஜையின் போது தலைவனாக இருந்து ஐந்து புலன்களையும் அடக்க வேண்டும்.***

* ***அடுத்து வாய்ப்பேச்சு மிக உண்மையாக சத்யமாகவே இருக்க வேண்டும்.***

* ***அடுத்து மிக மிக ஸ்திடமான பொறுமையும் சகிப்புத் தன்மையும் அவசியம்.***

* ***உடல் சுத்தமும் மன சுத்தமும் அடுத்து முக்கியம்.***

* ***அடுத்து மிக முக்கியமாகக் கோபம் என்பதே கூடாது.***

* ***ஒரு போதும் அதர்ம சிந்தனையே இருக்கக் கூடாது.***

* ***சற்றும் சுயநலமான காரியங்கள் செய்யக் கூடாது.***

* ***மிக்க நம்பிக்கையுடன் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்."*** என்று எட்டு பூக்களைப் பட்டியல் இட்டார்.

"இவற்றை எல்லாம் நம் குணங்களாக அல்லவா நாம் பார்க்கிறோம்? அதற்கும் பூஜைக்கும் என்ன சம்பந்தம் ஸ்வாமி?" என்றாள் வீட்டின் மகள்.

"சரியான கேள்வி கேட்டாய், வெளிப்புற பூஜைகள், வ்ரதங்கள், உத்சவங்கள், பண்டிகைகள், ஷேத்ராடனம், தீர்த்தாடனம், குரு சேவை, சத்சங்கம், பாராயணம், ஜெபம், யோகம், யாகம், ஹோமம், வழிபாடுகள், கலை மூலம் பக்தி இவை எல்லாம் மூலம் மேலே சொன்ன எட்டு குணங்களையும் இறைவனின் அருளால்

அடைய வேண்டும். அவை ஏன் இயற்கையாகவே கிடைக்காதா? பள்ளி-கல்லூரி படிப்பு அவற்றைத் தராதா என்று கேட்பீர்கள்!

பூமிக்குள் தங்கம் இருக்கிறது. அதைத் தோண்டினால் தானே எடுக்க முடியும்? இந்த குணங்கள் போன ஜென்மத்தின் புண்ணியத்தால் உங்களுக்குள் இருப்பினும், அவற்றை வெளிக் கொண்டு வர, மெருகு ஏற்ற சிலவற்றைச் செய்ய வேண்டும்.

இவற்றைச் செய்வதன் மூலம் இந்த உன்னதப் பண்புகள் உங்களுக்குள் வேர் ஊன்றி உங்கள் வாழ்க்கைக்கு நலம் செய்வது உறுதி!" என்று கூறி முடித்ததும் அனைவரும் அவரை வணங்கினர், அவரும் விடை பெற்றார்.

படுக்கும் முன் மகன் சொன்னான்,"அம்மா! நாளை முதல் நவராத்ரி முடிகிற வரை ஒரு வேளை நான் விழிப்புணர்வுடன் பட்டினி!"

மகள், "அண்ணா! கல்லூரி விட்டு சீக்கிரம் வந்து விடுவோம். பாட்டியுடன் சகஸ்ரநாமம் சொல்ல ஆரம்பிக்கலாம்,சரியா!?"

மகன்," அப்பா! காலம் காலமா வீட்டுப் பூஜை அறையில் வைத்து நீங்கள் பூஜிக்கும் மஹாமேருவைப் பற்றி எனக்கும் உபதேசம் செய்யுங்கள்!"

பெற்றோர்கள் மனம் நிறைந்து மஹான் சென்ற வழியை நமஸ்கரித்தனர். அவர்கள் நம்பிக்கையுடன் கடைப்பிடித்த நல்ல காரியங்கள் என்றுமே தொடரும் என்பதில் இனி என்ன ஐயம்?!